


அளவையூர் இசைஞானபூபதி

## R.S கேசவமூர்த்தி (வயலின் வித்துவான்)

அவர்களின் சிவப்பேறு குறித்த

# "கேசவ சரிதம்"

10.05.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அளவையூர் இசைஞானபூபதி

# R.S கேசவமூர்த்தி

(வயலின் வித்துவான்)

அவர்களின் சிவப்பேறடைந்தமை குறித்த

# "கேசவ சரிதம்"

10.05.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பே உருவமாய்
ஆர்வமே மூலதனமாய்
இசையே மூச்சாய்
ஈகையே வாழ்வாய்
உள்ளமே தூய்மையாய்
ஊக்கமே உறுதுணையாய்
ஏழிசையே உயிராய்
ஐயமே இல்லாமல் இசையோடு வாழ்ந்து
ஒற்றுமையே பலமாய்
ஓங்கி வளர்ந்த இசைஞான பூபதியே
**கே**ட்போர் லயிக்க இசைமழை பொழிந்தவனே
**ச**கலரும் போற்றும் சாத்வீக குணம் படைத்தவனே
**வ**ந்த விருந்தோம்பி வருவிருந்து காத்திருந்தவனே
**மூ**த்தவனே! நீ எமக்கு நல்வழி புகட்டியவனே

**ர்**
**த்** } உடன் சேர

**தி**யாக சீலனாக எம் சிந்தையில் நிறைந்தவனே உமது
பாதமலர் பணிந்து இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.

மனைவி, மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்ணில்
16
.
08
.
1951

விண்ணில்
25
.
04
.
2011

இசைஞான பூபதி

## இரத்தினம் செந்தில்வேல் கேசவமூர்த்தி அவர்கள்

## திதிநிர்ணயம்

கரவருஷம் சித்திரைத்திங்கள் பன்னிரண்டில்
பூண்ட தேய்பிறை அட்டமியில் – பார்புகழும்
இசைஞானபூபதி செந்தில்வேல் கேசவமூர்த்தி
பரமனடி சென்றடைந்தநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



**விநாயகர் துதி**

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

**பஞ்சபுராணம்**

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே யாளென்னைக் கொண்டாய் போற்றி
யூற்றாகியுள்ளே யொளித்தாய் போற்றி
யோவாதசத்தத் தொலியே போற்றி
யாற்றாயங்கே யமர்ந்தாய் போற்றி
யாறங்க நால்வே தமானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி

## திருவாசகம்

மெய்தானரும்பி விதிர்விதிர்த் துன்விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதானெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க்க முதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வண்ணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையாவூர்ந்த
மேகநாயகனை மிகு திருவீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோகநாயகனை யன்றிமற்றொன்றும்
உண்டெனவுணர் கிலேன்யானே.

## திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்க நம்பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடைமடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவியறுக்க வெநறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

வேதநாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகாபோற்றி மறுசமயங்கள்மாளப்
பேதகஞ்செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றியான்செய்
பாதகமனைத்துந்தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

## வாழ்த்து

வான்முகில வாழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைஞானபூபதி R.S கேசவமூர்த்தி

## (வயலின் வித்துவான்)

## அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்

### *பிறப்பு :-*

எண் சாண் உடம்பில் சிறப்பது சிரம்போல் இலங்கைத் திருநாட்டின் சிரமாம் யாழ்ப்பாணத்தில் மண்வளமும் கலைவளமும் ஒருங்கே அமையப்பெற்று சிறப்புக்கொண்ட அளவையூரில் (அளவெட்டியில்) விண்ணோர்களும், மண்ணோர்களும் வியக்கும் வண்ணம் காலஞ்சென்ற செந்தில்வேல் நீலாம்பாள் தம்பதிகளின் மூத்த புதல்வனாக 16.08.1951ம் ஆண்டு பிறந்தார். இவரின் உடன் பிறப்புக்களாக ஜெயரஞ்சினி, ஜெயரூபி, ஆகிய சகோதரிகளும் அன்புக்கு ஓர் சகோதரனாக இதயமூர்த்தி அவர்களும் பிறந்தனர்.

### *ஆரம்பக்கல்வி:-*

அமரர் இசைஞானபூபதி R.S. கேசவமூர்த்தி அவர்கள் ஆரம்பக்கல்வியை யா/சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயத்திலும் உயர்தரக்கல்வியை யா/தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியிலும் கற்றார்.

### *இல்வாழ்க்கை:-*

இந்தியாவிலிருந்து வருகைதந்து இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணம் நல்லூர்க்கந்தன் ஆலயத்தில் இசைப்பணி புரிந்த பிரபல நாதஸ்வர வித்துவான் மாரிமுத்து காந்திமதி தம்பதிகளின் இரண்டாவது புதல்வியான (61 வது மேளஹர்த்தா இராகத்தின் பெயரையுடைய) காந்தாமணி எனும் நாமம் கொண்ட மங்கையை 1982 நவம்பர் 19ம் திகதி கரம்பிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது இல்வாழ்க்கையின் தவப்பயனாக ஜெனகன் (Asst+Pharmasist,Hemas hospital), தணிகன், மேனகன், என்னும் மூன்று ஆண்பிள்ளைகளையும் நிலாங்கி என்னும் பெண் பிள்ளையையும் பெற்றெடுத்தனர் அமரர் அவர்கள் நாட்டுச் சூழல் காரணமாக நல்லூரிலும் (1983-1995) பின்பு கொழும்பிலும் (1995-2000) கனடாவிலும் (2001-2010) வசித்து வந்தார்.

# இசைப்பயணம்

## *இசைக்கல்வி (வயலின்):-*

ஆரம்பக் கல்வியை பிரபல நாதஸ்வர வித்துவான் மாவிட்டபுரம் உருத்திராபதி அவர்களிடம் கற்றார். பின்பு பிரபல வயலின் வித்துவான் ஈழநல்லூர் T.V பிச்சையப்பா அவர்களிடம் குருகுல வாசமாக அவரது வீட்டில் தங்கியிருந்து வயிலின் கலையை அவரிடம் நுட்பமாகக் கற்றுத் தெளிந்தார்.

## *பக்கவாத்தியக் கலைஞனாக:-*

இசைஞானபூபதி R.S கேசவமூர்த்தி அவர்கள் தன்னடக்கம் உடையவர். புகழ்பூத்த இந்திய, இலங்கைக் கலைஞர்களுக்கு மட்டு மன்றி வளரும் கலைஞர்களுக்கும் பக்கவாத்தியம் வாசித்து அவர் களைத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தும் உள்ளம் கொண்டவராவர்.

நல்லூர் இளங்கலைஞர்மன்றம் நடாத்தும் இசைவிழா, கம்பன் கழகம் நடாத்தும் இசைவேள்வி, ஆடல்வேள்வி, அண்ணாமலை மன்றம் நடாத்தும் இசைவிழா, அளவெட்டி இசைக்கலைமன்ற இசைவிழா, கொழும்புத் தமிழ்சங்க இசைவிழா போன்ற இசைவிழாக் களிலும் பல ஆலயத் திருவிழாக்களிலும் பல புகழ்பூத்த கலைஞர் களுக்கு பக்கவாத்தியம் வாசித்து புகழ் பெற்றவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது குருவான வயலின் வித்துவான் T.V பிச்சையப்பா அவர்களுடனும், இணுவையூர் (இணுவில்) இசைஞான திலகம் R. இராதகிருஷ்ணன் அவர்களுடனும் இணைந்து வயலின் வாசித்துப் பெருமை பெற்றவர். தனது மாணவர்களை இணைத்து பல நிகழ்ச்சிகளில் வயிலின் இசை வழங்கினார்.

அளவையூர் சங்கீதபூஷணம் V.K நடராஜா, அளவையூர் சங்கீதபூஷணம் S.வர்ணகுலசிங்கம், சங்கீதபூஷணம் S.பத்மலிங்கம் சங்கீதபூஷணம் பொன் சுந்தரலிங்கம், சங்கீதபூஷணம் S.பாலசிங்கம், சங்கீதபூஷணம் S.கணபதிப்பிள்ளை, சங்கீதபூஷணம் A.K.கருணகாரன், சங்கீதபூஷணம் L. திலகநாயகம்போல், சங்கீவித்துவான் S.சிவஞானராஜா, சங்கீதவித்துவான் பொன் ஸ்ரீ வாமதேவன், சங்கீத வித்துவான் K.இராமநாதன், சங்கீதபூஷணம் S. குமாரசாமி அளவையூர் சங்கீதபூஷணம் V.சிவஞானசேகரம், சங்கீதபூஷணம் K.R நடராஜா சங்கீத வித்துவான் திருமதி பார்வதி - சிவபாதம், முதுதத்துவமமானி செல்வி பரமேஸ்வரி கணேசன், இசைக்கலைமணி திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் இசைக்கலைமணி திருமதி. சராத பரஞ்சோதி, சங்கீதவித்துவான் திருமதி. மேரிசரோஜா ஜஸ்ரின் போன்றவர்களுக்கு பக்க வாத்தியம் வாசித்து பெருமைபெற்றவர்.

அளவையூர் நாதஸ்வர வித்துவான் M.P.பாலகிருஷ்ணர், அளவையூர் நாதஸ்வரவித்துவான் S.சிதம்பரநாதன், சாவகச்சேரி நாதஸ்வரவித்துவான் P.நாகேந்திரன் ஆகியோருடன் சேர்ந்து பல இசைக்கச்சேரிகளில் (கெஞ்சிற் கச்சேரி) வயிலின் வாசித்துள்ளார்.

இந்தியக் கலைஞர்களான வீணை ராஜேஸ்வைத்தியா அவர்களது வீணைக்கும் பாடகர்களான சௌமியா, காயத்திரி ஆகியோரது இசைகச்சேரிகளிற்கும் பக்கவாத்தியமாக வயலின் வாசித்து பெருமை பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலி/ தொலைக்காட்சியில்

இ லங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் "B" Grade சித்தி பெற்று நிலையக் கலைஞராக இசைப்பணியை மேற்கொண்டவர். இவர் ரூபவாகினி, சுயாதீன தொலைக்காட்சிகள், வசந்தம் T.V போன்றவற்றில் இசைப்பணியாற்றிய பெருமை பெற்றவர். இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் 1997 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை இதிகாசக் கதைகளான இரமாயணம், பாரதக்கதை நிகழ்ச்சிகளுக்கு இசையமைத்த பெருமை உடையவர்.

## இசையமைப்பாளராக:-

நல்லூர் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தினால் வெளியிடப்பட்ட அம்மன் பாடல்களுக்கு 1995ம் ஆண்டு இசையமைத்தார்.

இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தில் "இராமநாடகம்" என்னும் இராமாயாண நிகழ்விற்கு பல ஆபூர்வ இராகங்களில்இசையமைத்து புகழ்பெற்றவர்.

ஸ்ரீனிவாச கல்யாணம், தேவிதரிசனம், லவகுசா, பீஷ்மர் போன்ற நாட்டிய நாடகங்களுக்கு இசையமைத்தார்.

கனடா வரசித்திவிநாயகர் ஆலயத்தினால் வெளியிடப்பட்ட "ஞானஅமுதம்" இறுவெட்டுப்பாடல்களுக்கும், ஐயப்பன் ஆலயத்த னால் வெளியிடப்பட்ட பாடல்களுக்கும் இசையமைத்தார்.

## மனோண்மணி அம்மன் ஆலயத்தில் பூரணைத் தீப இசையரங்கு

நல்லூர் மனோன்மணி ஆலயத்தில் 1990 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டுவரை ஒவ்வொரு மாதாந்த பூரணைக்கும் "தீபஇசையரங்கு" என்னும் பெயரில் இசையரங்குகளை நடாத்தி அம் மனுக்கு இசைப்பணி செய்துவந்தார்.பின்பு 2010 ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் மாத கார்த்திகைத் தீப நன்நாளில் இசைக்கலைமணி S.கோபிதாஸ் அவர்களுடன் சேர்ந்து வயலின் இசை வாசித்தார். அதுவே மனோன்மணி ஆலயத்தின் அவர் வாசித்த இறுதிநிகழ்வாகவும் அமைந்தது.

## *கனடாவில் இசைப்பணி:-*

கனடாவில் 2001 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை வசித்த காலத்தில் பல புகழ்பூத்த இலங்கை, இந்திய கலைஞர்களுக்கு பக்கவாத்தியம் வாசித்துப் பெருமை பெற்றார்.

"ஞானோதயம் கலைக்கூடம்" (Gnanothayam Academy) என்ற நிறுவனத்தை 2002ம் ஆண்டு நிறுவினார். அதன்மூலம் பல மாணவர்களுக்கு வயலின் வாத்திய இசையைப் போதித்தார். வருடந்தோறும் ஆண்டு விழாக்களை நடாத்தி தனது மாணவர்களது பல இசை நிகழ்ச்சிகளை அரங்கேற்றினார். நிகழ்ச்சிகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு "இறுவெட்டுக்கள்" வெளியிடப்பட்டன.

கனடா வரசித்தி விநாயகர் ஆலயம், ஐயப்பன் ஆலயத்திற்குப் பாடல்களை இசையமைத்து இறுவெட்டு வெளியிட்டு பெருமை பெற்றார்.

## *நல் ஆசானாக:-*

மாணவர்களுக்கு வயலின் இசையைக் கற்பிப்பதில் மிகுந்த பொறுமையுடன், தெளிவுடனும், மாணவர்களை உற்சாகப்படுத்தி தட்டிக் கொடுத்துக் கற்பிப்பதில் சிறந்து விளங்கினார். தனது மாணவர்களுடன் சேர்ந்து பல இசை நிகழ்ச்சிகளை நடாத்தி மாணவர்களுக்குப் பெருமை சேர்த்ததுடன் தானும் பெருமையடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவரது சிஷ்யர்களாக (மாணவர்களாக)

திருமதி சுகன்யா அரவிந்தன் (விரிவுரையாளர்
யாழ் பல்கலைக்கழகம்)

திரு.சி. அகிலன் ( பொறியியலாளர், அவுஸ்ரேலியா)

திரு.S.ரதீஷ் (லண்டன்)

Dr.N. மனோரமணன் (நியூசிலாந்து)

செல்வன் S.கிசோன் - கனடா

செல்வி S. விரோசி - கனடா

செல்வன் S.ஸ்ரீராம் (இவர் இந்தியாவில் பிரபல்யமிக்க வளர்ந்து வரும் இளம் கலைஞர் ஆவார்.

போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

## இறைவனடி சேர்ந்தநாள்

கரவருஷம் சித்திரை மாதம் பூரணைக்குப்பின் வந்த அட்டமி திதியில் 25.04.2011 திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு இறைவணடி சேர்ந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவ அபிவிருத்திக்கழகம்

நாயன்மார்கட்டு யாழ்ப்பாணம்

## சான்றிதழ்

யாழ் ... [illegible] ... சேர்ந்த

வித்துவான் R. S. கேசவமூர்த்தி அவர்கட்கு

[illegible] விழாவின் போது

[illegible] பணிகட்காக

இசை ஞான பூபதி விருது / பரிசு

வழங்கிக் கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

| | | |
|---|---|---|
| [signature] | அ. சிவானந்தராஜா [signature] | [signature] |
| செயலர் | முதன்மைவிருந்தினர் | தலைவர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

கனடா



ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானத்தில்
18-08-2003 இல் நடைபெற்ற ஸ்ரீ நாக பூஷணி
கருமாரியம்மாளின் பூங்காவனத் திருநாளில்

வயலின் வித்வான்

**உயர்திரு R. S. கேசவமூர்த்தி**

அவர்களுக்கு

**'ஸ்வர ஞான கலாபமணி'**

என்னும் சிறப்புப் பட்டம் அனைத்துலக இந்துமத
குருபீட அவுஸ்திரேலியப் பொறுப்பாளர்
டாக்டர் சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களின்
நல்லாசியுடன் வழங்கப்படுகின்றது.

வாழ்க பல்லாண்டு வளர்க அவரது இசைப்பணி


ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
3025 Kennedy Road, # 10
Scarborough, Ontario

சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்
ஆலயஸ்தாபகர், பிரதமகுரு, முதல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SIVAN FINE ARTS ACADEMY
## CHENNAI




## சிறந்த ஆசிரியர் விருது

பாபனாசம் சிவனின் நினைவு இசைப் போட்டி மற்றும்
இசைவிழாவின் போது 13ஆம் தேதி ஆகஸ்ட் மாதம் 2006
அன்று பல வித்வான்கள், விதுஷிகளின் முன்னிலையில்
சிவன் ஃபைன் ஆர்ட்ஸ் அகாடமி

## R. S. கேசவமூர்த்தி

அவர்களுக்கு
ரொறன்ரோ நகரில் கர்நாடக சங்கீதத்தைப் பரப்பி வரும்
சிறந்த சேவையைப் பாராட்டி
சிறந்த ஆசிரியர் என்ற விருதை வழங்கி கௌரவிக்கின்றது.

**Papanasam Ashokramani**
**Director**

**August 13, 2006**
**Canada**

**www.sangeethamingepaadalam.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஓம்

ஸ்காபரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

கனடா

[illegible]

ஸ்ரீமான். கேசவமூர்த்தி செந்திவேல்

அவர்களுக்கு

சங்கீத வித்வ சிரோன்மணி

என்னும் கௌரவப் பட்டம்

ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருவருளுடனும்

Dr. சிவஸ்ரீ. நா. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களின்

நல்லாசிகளுடனும் வழங்கி கௌரவிக்கின்றோம்.

[illegible]
3025 Kennedy Road, # 10
Scarborough, Ontario

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நல்லூர் சைவ மகா சபை

# பட்டமளிப்புப் பத்திரம்

09.09.2010

நல்லூர் கந்தன் மகோற்சவ காலத்தில் நல்லூர் சைவ மகா சபை நடாத்தி வரும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையின் 25வது வருட பூர்த்தி விழாவை முன்னிட்டு வயலின் வித்துவான் அளவையூர் R.S.கேசவமூர்த்தி அவர்களின் கலைப் பணியைப் பாராட்டி நல்லூர் சைவ மகா சபை

## "இசைக்கலாஞான திலகம்"

என்னும் பட்டத்தை வழங்கி கௌரவிக்கின்றது.

திரு.து. இராஜன்
தலைவர்.

கானகதாவாரிதி
பிரம்மஸ்ரீ.நித்தியானந்தசர்மா
அமைப்பாளர்
நல்லூர் சைவ மகா சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ விருதுகள்

| விருது | வழங்கப்பட்ட ஆண்டு | வழங்கிய நிறுவனம் | வழங்கிய காரணம் |
|---|---|---|---|
| இசைஞானபூபதி | 1995 | சைவ அபிவிருத்திக் கழகம் நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம் | கீர்த்தனாஞ்சலி ஒலிப்பதிவு நாடா வெளியீட்டிற்கு ஆற்றிய இசைப்பணிக்காக வழங்கப்பட்டது. |
| ஸ்வரஞான கலாபமணி | 2003 | ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் (கனடா) | இசைப்பணி ஆற்றியமைக்காக வழங்கப்பட்டது |
| சிறந்த ஆசிரியர் விருது | 2006 | சிவன்ஃபைன் ஆர்ட்ஸ் அகடமி(கனடா) | ரொறன்ரோ நகரில் கர்நாடக சங்கீதத்தைப் பரப்பி வரும் சிறந்த சேவையை பாராட்டி வழங்கப்பட்டது |
| சங்கீத வித்வசிரோன்மணி | 2006 | ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் (கனடா) | லயலாவண்ணம் தாளவாத்திய இசைவிருந்து நிகழ்ச்சியில் வயலின் இசைவழங்கி சிறப்பித்தமைக்காக வழங்கப்பட்டது |
| சைவநெறிச்செல்வர் | 2007 | World Siva Forum (Canada) | சைவப்பணியாற்றி வருவதை பாராட்டி வழங்கப்பட்டது |
| இசைக்கலாஞான திலகம் | 2010 | நல்லூர் சைவ மகாசபை | கலைப்பணியை பாராட்டி வழங்கப்பட்டது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சொற் செல்வரின் பிரார்த்தனையுரை

ஆறு. திருமுருகன்
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

நாடறிந்தபெருங்கலைஞர் உயர்திரு.கேசவமூர்த்தி அவர்களின் ஆன்மா சாந்தி பெறத் துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றேன். பண்பும் பணிவும் எவரையும் மதிக்கும் நல்லியல்பும் மிக்க இனிய வித்துவான். இவரை பலவருடங்களாக பலான் நன்கு அறிவேன். இவரது தந்தையார் எங்கள் குடும்பத்தோடு மிகுந்த நட்புக் கொண்டவராக விளங்கியவர். எமது சிறுபராயம் முதல் இப்பெருங் கலைஞனின் ஆற்றல்கண்டு இன்புற்றேன். அன்னாரின் திடீர் மறைவு மிகுந்த வேதனையைகத் தருகிறது. பலான் கனடாவுக்குச் சென்ற வேளை அங்கு வசித்த திரு.கேசவமூர்த்தி அவர்கள் என்னைச் சந்தித்து எனது நிகழ்ச்சிகளுக்கு தவறாது வருகை தந்து உற்சாகம் மூட்டினார். மகாவித்துவான் இயல்இசை . வாத்தியவீரமணிஐயர் நினைவு வைபவம் கனடாவில் நடாத்தியபோது இவரது உதவி மறக்கமுடியாது. அன்னாரன் பிரிவு கலையுலகிற்கு நிரப்பமுடியாத இழப்பு என்பதில் ஐயமில்லை.

## தமிழ் வருட மாதங்களும் பருவகாலங்களும்.

| | | |
|---|---|---|
| *சித்திரை, வைகாசி* | - | *இளவேனில் காலம்* |
| *ஆனி, ஆடி* | - | *முதுவேனில் காலம்* |
| *ஆவணி, புரட்டாதி* | - | *கூர் காலம்* |
| *ஐப்பசி, கார்த்திகை* | - | *கூதிர் காலம்* |
| *மார்கழி, தை* | - | *முன்பனி காலம்* |
| *மாசி, பங்குனி* | - | *பின்பனிகாலம்* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராம ஜெயம்

# ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம் தெகிவளை

# *சுவாமியின் உள்ளத்தில் இருந்து பூபதியின் நினைவுகள்*

**சுவாமிஜி**

**சந்திரசேகர சுவாமிகள்**

பிரபல வயலின் வித்துவான இசைஞானபூபதி R.S கேசவ மூர்த்தி அவர்களின் தீடீர் மறைவை நினைக்க ஒருகணம் என் மூச்சு நின்றது. தினமும் ஸ்ரீராம ஜெயம் எனும் கூறும் ஆஞ்சநேய பக்தன் எம்மை விட்டு பிரிந்தது சற்று மனக்கவலை ஆனாலும் ஓர் ஆறதல் நேரடியாக ஆஞ்சநேயர் காலடியில் ராம கதைக்கு வயலின் இசைமீட்ட சென்றார் என்பது என் உறுதி. ஆஞ்சநேய பக்தன் ஆகிய பூபதி இவர்மட்டும் அல்ல இவர் குடும்பமே ஸ்ரீராம ஜெயம் சொல்லும் குடும்பம். எந்த நற்காரியம் என்றாலும் என்னிடமும், ஆஞ்சநேயனிடமும் ஆசிபெற்று தொடங்கும் குணமுடைய குடும்பம்.

கலைஞர் ஆகிய இவர் பெருமை என்ன என்றால் கனடாவில் வாழ்ந்தபோதும் என்னை அழைத்து கௌரிவத்த பெருமை இவருக்கே. அதுமட்டுமல்லாமல் ஆஞ்சநேயர் ஆலயத் திற்கு இறுவெட்டுகள் வெளியிட்டு இசைஅமைத்து கொண்டபோது இவர் தீடீர் மறைவு பொறுக்கவில்லை. இவர் பணியை தன் மகள் செய்வாள் ஆஞ்சநேயருக்கு சமர்ப்பிப்பாள் என எண்ணுகின்றேன் இவரது ஆத்மா என்றென்றும் சாந்திஅடையும் ஸ்ரீராமஜெயம் எனகூறி இன்பத்திற்குள் கலப்போடு ராமஜெயம் ஆகட்டும்.

ஸ்ரீராமஜெயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் என் உயிரோடு கலந்திருப்பாய்

கேசவன் தம்பி
செ. இதயமூர்த்தி
[பிரான்ஸ்]

என்னை மூர்த்தியென்றால் யாருக்கும் தெரியாது. நான் வயலின் கேசவமூர்த்தியின் தம்பி என்றவுடன் எல்லோர் புரவங்களும் உயரும். ஓம், உண்மைதான். என்னுடைய அண்ணாவால் நான் பெருமைபெற்றேன். என்னுடைய அண்ணாவால் நான் உயர்ந்தேன். என்னுடைய அண்ணாவால் நான் அடையாளப்படுத்தப்பட்டேன்.

எனக்கும் என் அண்ணாவுக்கும் பத்துவயது வித்தியாசம், அண்ணா எங்கள் குடும்பத்தில் மூத்தவர். அண்ணாவுக்குமட்டுமல்ல எல்லாருக்கும் நான் சின்னத்தம்பிதான். எல்லா அண்ணன்மாரையும் போல என்னுடைய அண்ணா கண்டிப்பானவர் அல்ல. மிகுந்த பாசமுள்ளவர். அன்பானவர். என்னுடைய குறும்புகளைக்கூட நேரடியாக என்னைக்கண்டித்தவரல்ல. அம்மாவிடம்தான் முறையிடுவார். எங்கள் அப்பாவும் வசதியானவர் அல்ல, என்னுடைய அண்ணா தான் எங்களுக்கு அப்பா ஸ்தானத்திலிருந்தும் எங்களை வளர்த்தெடுத்தார். சின்னவயசிலிருந்தே எங்களுக்காக உழைக்கத்தொடங்கி விட்டார்.

நான் என்னுடைய அண்ணாவைப்பார்த்து இருபதுவருடங்கள் ஆகிவிட்டது.ஆனாலும் தினம் தினம் அண்ணா என் மனத்திரையில் ஓடிக்கொண்டுதானிருக்கின்றார். என்னுடைய வாழ்க்கையில் என்ன பிரச்சினையென்றாலும் நான் என் அண்ணாவைவிட்டு யோசித்ததில்லை. அண்ணாவின் ஆலோசானையின்றி செய்ததில்லை. என்அண்ணாவிலிருந்த பாசம், அண்ணா தூக்கிய அதே வயலின் கருவியை என்னையும் தூக்கவைத்தது. தூர இருந்தபோதும் வயலின் நுணுக்கங்களை நான் அண்ணாவிடமிருந்து கேட்டுஅறிந்து கொள்ளக்கூடியதாயிருந்தது. சலிப்பின்றி உற்சாகமாய் என்னோடு ஒரு நண்பனைப்போல உரையாடுவார். நான் அண்ணாவைப்போல ஒரு வயலின்வித்துவான் என்று என்மனது இப்போது அடித்துச் சொல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாவுக்காக நான் இப்போது மனதுக்குள் சிவரஞ்சனி ராகம் இசைக்கிறேன். அந்த இசையின் சுருதியில் என் நெஞ்சு விம்மு கிறது. அடக்கிக்கொள்கின்றேன். எனக்கு அப்போது பத்துவயது. இலங்கை வானொலியில் அண்ணா வயிலின் வாசிக்கப்போகிறார் என்ற செய்தி கடிதமூலம் வந்தது. என்னுடைய மகிழ்ச்சிக்கு அள வில்லை. நான் அளவெட்டிமுழுக்க அந்தச் செய்தியை காவித்திருந் தது எனக்கு இப்போதும் நினைவுக்கு வருகிறது. ஊரில் நடக்கும் அண்ணாவின் கச்சேரிகளிலெல்லாம் முன்வரிசையில் இருந்து ரசித்திருக்கின்றேன் என்பதைவிட என்னுடைய அண்ணா என்று பெருமையடித்திருக்கின்றேன். எங்களுடைய ஒரு கூட்டுக்குடும்பம் போல. ஒருவர் கண்ணில் தூசு விழுந்தால் மற்றவர் கண்ணில் நீர்வரும். எங்களுடைய அண்ணா சாகவேண்டிய வயதல்ல இது. இவ்வளவு காலமும் எங்களுக்காகவே வாழ்ந்தார். இனிமேல்த்தான் அவர் தனக்காக வாழவேண்டிய காலம். இந்தருணத்தில் அவர் போய் விட்டாரே என்று எண்ணும்போது தாங்கமுடியாமல் இருக்கிறது. நான் என்மனதை எவ்வளவோ ஆறுதல் படுத்த முயல்கின்றேன். ஆனால் முடியவில்லை. தனித்திருக்கும் வேளைகளில் அண்ணா நினைவால் துவண்டுபோகிறேன். அண்ணா கனடாவில் இருந்தார். இருபது வருடங்கள் அண்ணாவைவிட்டு பிரிந்திருந்தேன். அந்த பிரிவு நிரந்தரமாய் ஆகுமென்று நான் கனவிலும் எண்ணவில்லை. மறு பிறவி என்று ஒன்றிருந்தால் மீண்டும் எங்களுக்கு அவர் அண்ண னாகப்பிறக்கவேண்டும். அதுவே என் ஆசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியாத கலைஞர்

சங்கீதபூஷணம் பொன் சுந்தலிங்கம்
இளங்கலைஞர் மன்றம்
கனடா

இசைஞானபூபதி R.S கேசவமூர்த்தி அவர்கள் எல்லோருடன் அன்பாகப்பழகும் கலைஞர் ஆவர். இளங்கலைஞர்மன்ற செயற்பாடுகளில் என்னுடன் சேர்ந்து செயற்பட்ட ஒரு கலைஞர் ஆவர். நல்லூர் இளங்கலைஞர்மன்ற இசைவிழாக்களில் பல நிகழ்ச்சிகளுக்கு வயிலின் வாசித்துள்ளார். இளங்கலைஞர் மன்றத்தனிால் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தை முன்னிட்டு நடாத்தப்படும் இசைநிகழ்ச்சிகளிலும் வயலின் வாசித்துள்ளார். எனது சில இசைக்கச்சேரிகளிலும் பக்கவாத்தியமாக வயலின் வாசித்துள்ளார். கனடாவிலும் எனது இசைக்கச்சேரிகளில் வாசித்ததோடு சிறந்த இசைப்பணியையும் ஆற்றியுள்ளார். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லா வல்ல இறைவனைப்பிரார்த்திக்கின்றேன்.

## தலைசிறந்த தந்தைகள்

| | |
|---|---|
| கணணிப்பொறியின் தந்தை | - சாள்ஸ் பாபேஜ் |
| செல்லிடத் தொலைபேசியின் தந்தை | - மாட்டின் கூப்பர் |
| கூப்பர்பொருளாதாரத்தின் தந்தை | - அடம் சிமித் |
| துப்பறியும் நவல்களின் தந்தை | - எட்கர் அலன்போ |
| தொலைபேசியின் தந்தை | - அலெக்சாண்டர்கிரகாம்பெல் |
| மருத்துவத்தின் தந்தை | - ஹிப்போகிரட்டஸ் |
| இயற்பியலின் தந்தை | - சேர். ஐசாக் நியூட்டன் |
| சோதனை அறிவியலின் தந்தை | - ஆக்கிமிடீஸ் |
| நவீன வேதியலின் தந்தை | - ஆல்பர்ட் ஐன் ஸ்டீன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்திற்கு வாசித்து பலரது பாராட்டையும் பெற்றவர் இசைஞான பூபதி

சங்கீதபூஷணம், கலாபூஷணம்
அளவையூர் V.K நடராஜா

அளவெட்டி இசைவேளாளர் மரபில் வந்த செந்திவேல் கேசவமூர்த்தி அவர்கள் ஆரம்பகல்வியை சீனன்கலட்டி ஞானோத யாவிலும், மகாஜனாவிலும் கற்றுத் தேர்ச்சியடைந்தார்.

அளவெட்டி இசைக்கலை மன்றம் நடாத்திய இசைவகுப்பில் மாணவர்களுக்கு வயலின் கற்பித்தார். அத்தோடு எனது கச்சேரிகள் நாட்டின் பலபகுதியிலும் நடந்தபோது இவரும் எனக்கு உறுதுணை யாக இருந்து உற்சாகமூட்டி தனது வயலின் இசையால் பாடகரையும், கேட்போரையும் மகிழ்வித்தார்.

1985ம் ஆண்டு திருகோணமல கோணேசர் கோவில் பூங் காவனத் திருவிழாவிலே நான் பாடியபோது எனக்கு மிக அனு சரணையாக வாசித்து அதிலும் திருவாசகம் "அம்மையே அப்பா" என்பதைப்பாடியபோது எனது திருவாசகத்திற்கு நான் பாடிய ஓசை யிலே இவரி வாசித்து பலர் பரவசத்தோடு எழுந்துநின்று இரசித்ததை எனது கண்முன்னே இன்றும் காட்சியாக தெரிகின்றது.

இவருடைய வல்லினமெல்லினமாகவும், ஒதுக்கசதுக்கமாக வும், கமகங்களைச் சுத்தமாகவும் வாசித்து வயலின் வாத்தியத்தில் தனக்கென்றொரு முத்திரையைப் பதித்தார். இவ்வாறு இசைமழையை பொழிந்து பலரின் பாராட்டுதலைப் பெற்று இன்னும் சில காலம் வாழக்கூடிய இவர் இடைநடுவில் நம்மைவிட்டுப் போனது இசையு லகிற்கு பேரிழப்பாகும்.

"மண்ணில் பிறந்தவர் மறையவன் தானடி சேர்வது திண்ணம்" அவ்வாறே இவர் கூத்த பிரானின் சந்நிதியில் பேரின்பப் பெரு வாழ்வு பெற எல்லாம் வல்ல கும்பிழாவளை விநாயகனை வேண்டி அமைகின்றேன். அவரது குடும்பத்தினரும் உறவினரும் சாந்தி அடைந்து வாழ பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுப் பதிவுகளில் இருந்து

திருமதி. சுகன்யா அரவிந்தன்
[விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்]
திரு. அகிலன் சிவானந்தன்
[பொறியலலாளர், அவுஸ்திரேலியா]

பிறப்பவர் இறப்பது உலக நியதி. அந்த வகையில் அமரர் வித்துவான்ஆர்.எஸ் கேசவமூர்த்தி அவர்களும் தனது பிறவிப் பெருஞ்சக்கரத்திலே இப்பூவுலகில் மானிடராய் எம்மோடு சிறிது காலம் வாழ்ந்து சென்றிருக்கிறார். இவர் வாழ்ந்த காலம் அளவில் சிறிது எனினும் தான் சார்ந்தோர்க்கு செய்த சேவை சொல்லற்கரியது.

இசை உலகிற்கு அன்னாரது திடீர் மறைவு மாற்றீடு செய்து கொள்ள முடியாததொன்றாகும். குருநாதர் அவர்களது பணிவான, கனிவான பேச்சு அவரது வாழ்வின் வெற்றிக்குரிய பண்புகளாக அமைந்தன. குருநாதர் அவர்களின் கீழ் கலைபயின்ற காலம் நாம் பேறு பெற்ற காலம் என்றே கூறவேண்டும். கலையினை செல்வம் மீட்டித்தரும் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் சமகால சமூக ஓட்டத்திலே கலைக்காக வாழ்ந்து கலைச்சேவையே மூச்சாக வாழ்ந்து சென்றவர் எம் குருநாதர் அவர்கள். கலைஞர்களினிடையே பேதம் காணாது குழந்தைகளாயினும் சரி கலைவேந்தராயினுஞ்சரி உரிய மதிப்பளித்து தகுந்தவகையிலே இசைவழங்கி அந்த நிகழ்ச்சி சிறப்படைய அனுசரணையாக அருகிருப்பவர். எவரையும் ஊக்கப் படுத்த அவையிலே முதன்னிலைப்படுத்திப் பார்ப்பதிலே நிறை வடையும் மனப்பக்குவம் கொண்டவர். குருநாதரின் அனுசரணையால் சிறப்படைந்த கலைநிகழ்களங்கள் பல. அன்னாரது வழிப்படுத்தலி லும் ஊக்கத்தாலும் இன்று இசை உலகிலே சிறப்புடன் இருப்பவர்கள் பலர்.

இறைவன் சிற்பையிலே என்றும் அருகிருத்தவோ என்னவோ எம் குருநாதரை விரைவாக அழைத்துக்கொண்டார். குருநாதர் அவர்கள் தனக்கென இலங்கையிலும் சரி கனடாவிலும் சரி ஒரு மாணவர் அணியை உருவாக்கி வைக்க தவறவில்லை. எம் குரநாதரின் வழிநடத்தலை சிரமேற்கொண்டு இசைப்பணிபுரிந்து அவரது ஆத்மசாந்திக்காக பிரார்த்தனையுடன் செயற்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரசிரியார் கலாநிதி அ.சண்முகதாஸ் அவர்களால்
"இசைஞானபூபதி" பட்டம் வழங்கி கௌரவிக்கும்போது




ஸ்ரீ மனோன்மணி ஆலயத்தில் கேசவமூர்த்தி அவர்களால்
நடாத்தப்பட்ட தீப இசையரங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது குரு T.V பிச்சையப்பா மற்றும் பெரியதந்தையார் G. சண்முகனாந்தம் அவர்களுடன் இசைஞானபூபதி அவர்கள் இசை நிகழ்த்தியபோது



தெய்வீக இசையரங்கில் தனது மாணவியுடன் இசைநிகழ்த்தும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1972 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் இசைநிகழ்ச்சியின்போது




ஞானோதாயம் கலைக்கூட ஆண்டு விழாவின்போது மங்களஇசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இளங்கலைஞர் மன்றாத்தால் நடாத்தப்பட்ட நல்லூர் கந்தன் ஆலயத்தில் நடைபெற்ற தெய்வீக இசையரங்கு**




**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட இசைவிழா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைமேதைக்கோர் அஞ்சலி
# கனடாவிலிருந்து செம்மணிவரை

**திருமதி இராஜேஸ்வரி ஜெகானாந்தகுரு**
**(இசைக்கலைஞர்கள் சார்பில்)**

வயலின் இசைத்திலகமே! உங்களுக்கு இந்தப் பயணம் தேவைதானா? இதற்காகவா கனடாவிலிருந்து புறப்பட்டீர்கள்?!. கொழும்பு வந்ததும் உங்களபுதிய திட்டங்கள் பற்றி எத்தனை ஆதங்கத்தோடு கண்டதை கூறினீர்கள். வயலின் வகுப்புக்கள் வைத்தாகவேண்டும், இறுவெட்டுக்கள் வெளியிடவேண்டும். S.L.B.Cக்கு இயன்ற அளவு சேவை செய்யவேண்டும். அதனைச் செய்யவும் செய்தீர்கள். ஸ்வரஸாகித்தியத்தோடு என்னிடம் நிரம்ப இசை உருப்படிகள் உண்டு, உங்ளுக்குத் தருகின்றேன், நீங்கள் அவற்றை உங்கள் வீணைகற்கும் மாணவர்களுக்குப் பயன்படுத்துங்கள் என்றீர்கள். எங்கள் இல்லம் வரவும் செய்தீர்கள். நீங்கள் சொன்னபடி யான் விரும்பய எனக்குத் தேவைப்பட்ட உருப்படிகளைத் தரவும் செய்தீர்கள். இத்தனை பெரிய மனசு யாருக்கு ஐயா வரும்!!

கொழும்பில் வந்து நின்ற ஒரு சில நாட்களுள் நிரம் வயலின் கச்சேரிகள் செய்தீர்கள். அனுசரணையாகவும் வாசித்திர்கள். இடையிடையே யாழ் சென்று நல்லூரிலும் தங்கி இசைக்கச்சேரிகள் செய்தீர்கள். அதையிட்டு நிரம்பத் திருப்தியும் கொண்டீர்கள். சமீபத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் "ஆலாபனா"வின் வயலினிசைக்கச்சேரி செய்தீர்கள். சங்கீத வித்துவான் கருணாகரன் உட்பட யாம் எல்லோரும் காதாராக் கேட்டு அனுபவித்துச்சுவைத்த உங்கள் கடைசிக் கச்சேரி அது என்று அப்போது எங்களுக்குத் தெரியாது. என்ன மனித ஜன்மம்.

தர்மவதி இராகத்தை பிரதானமாக ஆலாபனை செய்து உருப்படி வாசித்து ரசிகர்களையெல்லாம் எங்கேயே கொண்டுசென்றுவிட்டீர்கள் அன்று. உங்கள் சொந்த ஆக்கம் என்று கூறி நல்லூரான் பற்றிய ஓர் அழகான கீர்த்தனையையும் வாசித்தீர்கள். அத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான உருப்படி நிரம்பச் சங்கதிகள் கேட்டோம். ரசித்தோம் இனி எப்போது அத்தகையதோர் வயலினிசையை உங்கள் விரல்கள் எழும்பும்? இது வினாவாகவே தொக்கி நிற்கின்றது.

சிறு நண்டு மணல்மீது படமொன்று கீறும்
சிலவேளை கடல் வந்து அதைகொண்டு போகும்.

- மகாகவி-

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை வழக்கமாக மாலை வேளையிலே தான் இசை நிகழ்ச்சிகள் கொ/தமிழ்ச் சங்கத்தில் நடைபெறுவது வழக்கம்அன்று மாத்திரமே காலையிலே உங்கள் கச்சேரி நடைபெற இருந்தது. காலை நேரம் வீட்டுவேலைகள் உண்டு. வீணை வகுப்புக்கள் உண்டு எனக் கச்சேரிக்கு வரத் தயங்கினேன் நான். "இல்லை இல்லை வாருங்கள் நீங்கள் வந்தால்தான் எனக்கும் வாசிக்க உற்சாகமாக இருக்கும்" என்றீர்கள். மறுபேச்சுக்கு இடம் வைக்கவில்லை புறப்பட்டுவிட்டேன். கச்சேரியை ரசித்தேன். அத்தனை சுகமாக அமைந்தது அன்றைய உங்கள் வயலின் இசை.!. எப்போது அத்தகைய கச்சேரியை நீங்கள் வழங்குவது?

யாழ்ப்பாணத்தில், இசைக்கு இருப்பிடமாக விளங்கும். அளவெட்டியில் பிறந்து அமைதியாக வாழ்ந்து நல்லை ஊரான நல்லூரில் திருமணம் செய்து அங்குஇசைப்பணி நிரம்ப ஆற்றி. பின்னர் தலைநகர்வந்து, கொழும்பில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனத்தில் தேசிய ஒலிபரப்பில் திறம்பட மனதார நீங்கள் செய்த சேவை நேயர்கள் அறிந்ததே. அதில் நீண்ட காலமாக தேசிய ஒலிபரப்பில் வெளிவந்த கிராம நாடகம், நிகழ்ச்சிக்கு நீங்கள் இசைஅமைத்த பாடல்கள் அத்தனை அவை மிக்கவை. பற்பல ஆபூர்வ இராகங்களில் பாடல்களுக்கு இசையமைத்து ரசிகர்களை ஈர்த்த பெருமை உங்களுக்கு.

உங்கள் குடும்பம் அன்பான மனைவி மணியான மூன்று ஆண்.குழந்தைகள். செல்வம் பேண ஒரு செல்ல மகள். உங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவசமாக உங்கள் வயிலின் இசை. உங்கள் அமைதி, அடக்கம், புரிந்துணர்வு, பரோப்கர சிந்தை கடமையுணர்ச்சிக்கு இவைகள் உங்கள் இயல்பு. இதனாலும் உங்கள் வயலினிசை ஆற்றாலாலும் நீங்கள் பல ரசிகர்களை வென்றெடுத்தீர்கள். உங்கள் பெருமையை, ஆற்றலை நீங்கள் சற்றும் வெளியே காட்டிக் கொள்வதில்லை. அதேபோல் கடைசிகாலத்தில் உங்கட்கு ஏற்பட்ட நோயையையும் நீங்கள் பெரிசுபடுத்தவில்லை. இசைஎன்னும் போர்வைக்குள் அதை மறைத்து விட்டீர்கள். அதன் பலன் நீங்கள் இப்போது இசை வழங்க எங்கள் மத்தியில் இல்லை. இது எத்தனை இழப்பு. உங்கள் குடும்பத்திற்கு ரசிகர்களுக்கு.

கனடா சென்ற நீங்கள் ஏறக்குறைய 10 வருட காலம் அங்கு கொடி கட்டிப் பறந்தீர்கள் என்று நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். நிறையத் தரமான மாணவர்களை உருவாக்கி அவர்களைக் கொண்டு இசை நிகழ்ச்சிகளும் பல செய்வித்தமையை நாம் அறிவோம். நன்றாக, நான் எதிர்பார்த்ததிலும் பார்க்க, அந்த மாணவர்கள் வாசிக்கின்றார்கள் எனக் கூறினீர்கள் அந்தப் பெருமை உங்களையே சாரும். நீங்கள் கடமையுணர்ச்சி மிக்க நல்லதோர் ஆசான் என்பதை யாமறிவோம். உங்கள் குடும்பத்தினருக்கு ஆறதல் சொல்லலம் தேற்றலாம். ஆனால் நீங்கள் விட்டுச் சென்ற இடைவெளியை நிரப்பமுடியுமா? காலம் தான் பதில் சொல்லும். உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

"வகுத்தான் வகுத்த வகை அல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையைத் தொலைத்துவிட்டோம்

கொ/இராமநாதன் இந்து மகளிர்
கல்லூரிச் சமூகம்.

இசையால் வசப்படுத்தி
இன்னிசை பொழிந்த மூர்த்தியே
ஓசை ஒலியெலாமான - அந்த
பரமசிவன் மூர்த்தியுடன்
பரவசமாய் சென்றிரோ
உந்தன் மகளை மட்டுமல்ல
இராமநாதன் மகளிரையும்
உயரவைத்தீர் இசையால்
கலைவிழா என்ன நவராத்திரி என்ன
தமிழ்த்தின விழா என்ன
வித்தைகள் எத்தனை - அத்தனையும்
செய்தன உந்தன் விரல்கள்
வீணாகப் போகவில்லை
வீழ்ந்துவிடவில்லை - நாம்
இயல் இசை நாடகத்தில்
வீறு நடை போடுகின்றோம்
வேற்று நாடு சென்ற நீர் - மீண்டும்
தாய் நாடு வந்ததும்
தொடரும் உந்தன் சேவை - என
எதிர்பார்த்துக்காத்திருந்தும்
தேடுகிறோம் தொலைத்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பாராத இழப்பு

கம்பவாரிதி
இ.ஜெயராஜ்

நிலையாமையே உலகின் நிலைத்த இயல்பாம்
நேற்றிருந்தார் இன்று இல்லை என்னும் கூற்று என்றும்
நிகழ்ந்துக்கொண்டு இருப்பது
இயல்பான மரணத்தின் தன்மை,
எவ்வளவுதான் அறியப்பட்டாலும்,
சிலரது மரணம் நம்மைப் பாதிக்கவே செய்கின்றது
அங்ஙனம் நம்மைப் பாதித்த மரணத்துள் ஒன்றாய் அமைந்தது
வயலின் வித்துவான் கேசவமூர்த்தியினது மறைவு.
திரு.கேசவமூர்த்தி அவர்கள்
நம் ஈழத்து இசை உலகில் திறமையால் தன் பெயர் பதித்தவர்.
எமது கழகத்தின் பல நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தவர்.
உறவாய் நம்மோடு நெருங்கிப் பழகியவர்.
எளிமையும் அன்பும் மிகுந்த அவரை இவ் இளவயதில் இழந்தது,
இத் தேசத்துக்கும் நமக்கும் நிகழந்த பேரிழப்பு.
அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆறதலைத் தெரிவித்து,
அவரது ஆத்ம சாந்திக்காய்ப் பிராத்திக்கிறோம்.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்த இசை உறவு

**நாதஸ்வர வித்துவான்**
**எஸ். சிதம்பரநாதன்**

மரணத்தின் பாதிப்பு என்றும் கவலையானதே,
உறவென்பது பிறப்பால் மட்டும் வருவதன்று
கலையும் உறவின் ஓர் ஊடகமே.
உறவாலும்,இசையென்னும் கலையாலும்,
ஒன்றிணைந்த வயலின் வித்துவான் கேசவமூர்த்தியின் இழப்பு பெரும் அதிர்வைத் தந்தது.
மென்மையான பண்பு, சிரித்தமுகம், தன்னடக்கமான உயர்வு,
என்பன அவர் தனித்த பண்புகள்.
எவரோடும் பகை கொள்ளா அவரது இயல்பினால்,
அனைவரது அன்பையும் சம்பாதித்திருந்தார்.
இன்று அவரது இளமை மரணத்தால்,
அனைவரும் வாடி நிற்கின்றோம்.
அந் நல்லாத்மா சாந்தியடையவும்,
அந் நல்லாத்மா சாந்தியடையவும்,
குடும்பத்தார் ஆறதல் அடையவும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேசவமூர்த்தியின் அனுதபாச்செய்தி

சேதநேந்து, கலாசூரி
அருந்ததி ஸ்ரீரங்கநாதன்

வயலின் வித்துவான் R.S கேசவமூர்த்தியின் திடீர்மறைவு, எமையெல்லாம் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அண்மையில் இந்தியா கலாசார நிலையத்தில் நடைபெற்ற தியாகராஜா ஆராதனை வைபவத்தில் கலந்து நிகழ்ச்சியை சிறப்பித்தமை, இன்னும் மனதை நீங்காதுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ்ச்சேவை பணிப்பாளராக நான் கடமையாற்றிய சமயம், வாத்தியகோஷ்டியில் வயலின் கலைஞராக பணியாற்றிய கேசவமூர்த்தி, இசைக்கச்சேரி வாத்திய, பிருந்தா, இசைச்சித்தரம், தேசிய வைபவங்கள் போன்ற பல நிகழ்ச்சிகளில் பங்கேற்று தமது ஆற்றலை திறமையுடன் வெளிக்கொணர்ந்தார். பல இந்தியக்கலைஞர்களுக்கும் வயலின் வாசித்த பெருமை அவருக்குண்டு.

நான் இசையமைத்த பல நாட்டிய நாடகங்கள், நாட்டிய நிகழ்ச்சிகளுக்கு வயலின் வாசித்துள்ளார். ஸ்வர அமைப்புகள் துல்லியமாக அறிந்த உடனே வாசிக்கும் திறமை அவரிடம் மிகுந்தது. அவர் கனடாவில் பணியாற்றும்போது பல இசை நிகழ்ச்சிகளில் பங்குபற்றி, பல மாணவர்களையும் உருவாக்கியுள்ளார்.

கனடாவில் 'பீஷ்மர்' நாட்டிய நாடகத்திற்கு நான் இசையமைத்து பாடிய சமயம், எனக்கு பக்கபலமாக வயலின் வாசித்தது இன்னும் நினைவில் உள்ளது. அங்கு நான் பங்குகொண்ட சச்சேரிகளுக்கும் வயலின் வாசித்தார்.

முக்கியமாக அவரது விருந்தோம்பல் பண்பைக் குறிப்பிட வேண்டும். கனடா செல்லும் சமயமெல்லாம் வற்புறுத்தி அமைத்து விரும்தோம்புவது அவருக்குரிய தமிழர் தம் பண்பாட்டை வெளிப்படுத்தியது. மகளுக்கு நாட்டிய அரங்கேற்ற வைக்கவேண்டும். நீங்கள் தான் பாடவேண்டும் என்று அடிக்கடி கூறுவார்.

பணியாக அன்போடு பேசும் திறமைசாலி கேசவமூர்த்தி இவரது மாணவ இசைபாடிகளிற்கு பேரிழப்பு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன். மனைவி, மக்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானஉதயம் உதயமானது

**சித்ரா சபாநாதன், ஆனந்தி வைத்தியநாதன்**
**இராகசுதா நுண்கலைக் கல்லூரி**
**கனடா**

ஞானஉதயம் இசைஞானம் உதயமானது
இசைஞானமே உதயமாகியது உன் இசைக்கல்லூரியில்
உலக மக்களே இன்புற்றார்கள் உன் திறமைகண்டு
வியந்த மக்கள் உன்னை இசைஞான பூபதி ஆக்கினார்கள்

உன் கைவிரல் எழுப்பும் நாதம் எம் காதில் ஒலிக்கிறது
உன் புன்னகை தவழும் முகம் எம்கண்ணில் தெரிகிறது
உன் சாந்த குணம் அனைவரையும் சிந்திக்க வைத்தது
உன் ஆழ்ந்த தூக்கம் எம்மை எல்லாம் நிலைகுலைய வைத்தது

உன் பெருமை நீ அறியவில்லை உலகம் அறிந்தது
உன் வித்துவம் நீ அறியவில்லை உலகம் அறிந்தது
உன் பண்பு நீ அறியவில்லை உலகம் அறிந்தது
உன் ஆழ்ந்த தூக்க நீ அறியவில்லை உலகம் அறிந்தது

இசைக்கலைஞர்கள் உன்பிரிவால் கதிகலங்கிட
இசைபயின்ற மாணவர்களோ ஆசானை இழந்திட
இளம் கலைஞர்களை எல்லாம் உருவாக்கிய நீங்கள்
அவர்கள் திறமையை கண்டதில்லை - ஆனால்
நாம் கண்டோம் ஐயா இசை அரங்கெல்லாம் உன் வடிவில்

உன் உயிர் பிரியலாம் உடலை விட்டு
உன் உடல் கருகலாம் உடலை விட்டு
உன் எண்ணம் மறையலாம் உறவை விட்டு
உன் இசை பிரியாது உலகை விட்டு - நீ
எமக்கு விட்டுச்சென்ற இசை பிரியாது நம்மைவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடாவில் "ஞானோதயம் கலைக்கூடம்" திறப்புவிழாவின்போது



ஞானோதயம் கலைக்கூட ஆண்டுவிழாவில் மாணவர்களின்
இசை நிகழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கனடா ஞானோதயக் கலைக்கூட மாணவர்களில் சிலர்




கனடா குரும்பசிட்டி நலன்புரிசபை நடாத்திய இசைவிழாவில்
தனது மாணவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கம் அவர்களது இசைநிகழ்ச்சியில்
கேசவமூர்த்தி அவர்கள்



இந்தியாவின் பிரபல்ய பாடகி நித்தியஸ்ரீ மகாதேவன் அவர்கள்
கனடாவில் கேசவமூர்த்தியின் இல்லத்திற்கு சென்றபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியாத கலைஞன்

திரு. அம்பலவாணன் ஜெயராமன்
வயிலின்வித்துவான்
நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மண் கலை பாரம்பரியத்தில் ஒரு பெருமை சேர்ந்த மண்ணாக மிளர்வது யாவரும் அறிந்த தொன்றே. அம்மண ணில் பெருமைக்கும், புகழுக்கும் அமைதி சேர்ந்த ஊராக மிளிர்வது எமது அளவெட்டியூர் என்றால் மிகையாகாது. இம்மண்ணிலே பிறந்து இம்மண்ணிற்கும் நம்மண்ணிற்கும், பெருமை சேர்த்தோர் வரிசையில் திரு.ஆர். எஸ் கேசவமூர்த்தி அவர்களும் ஒருவராவார் என்பது குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

கேசவமூர்த்தி அண்ணாவை இலங்கை ஒலிபரப்புக்கூட்டு தாபனத்தில் வயலின் கலைஞராக பணிபுரியும் காலத்தில் இருந்து எங்கள் குடும்பத்துடன் மிக நெருக்கமாகவும்,, நட்புடனும் பழக சந்தர்ப்பம் கிடைத்தது. அக்காலங்களில் எனது தந்தையார் காலஞ் சென்ற மிருதங்க வித்துவான் திரு.வே. அம்பலவாணர் எனது அண்ணன் திரு.அ. இரகுநாதன் இருவரின் மிருதங்க தாளவாத்தியக் கச்சேரிக்கு பல்லவி வாசித்து சிறப்புற நிகழ்ச்சி அமைவதற்கு மெருகூட்டியவர். அது மட்டுமல்ல அதே கூட்டுத்தாபனத்தில் நடக்கும் இசைக்கச்சேரிகளுக்கும், ரூபவாஹினில் கூட்டுத்தாபன இசைக்கச்சேரிகளுக்கும், நடனநிகழ்ச்சிகளுக்கும், நடனநிகழ்ச்சி களுக்கும் பக்க வாத்தியம் வாசித்து சிறப்புப் பெற்றவர். பின் யாழ்ப் பாணம் வந்ததும் என்னுடன் சேர்ந்து ஈழத்துப் பாடல்களுக்கும், ஆலயங்களில் வெளியிடும் ஒலிப்பதிவு நடாக்கள், இறுவெட்டுக் களிலும், பக்க வாத்தியமாக வாசித்து புகழ் பெற்றவர். மற்றும் இங்கே நடக்கும் தெய்வீக இசையரங்குகளில், இசைவிழாக்களில் ஆலயத் திருவிழாக்களில் நடைபெறும். இசைக்கச்சேரிகளுக்கும், மிகத்திற மையுடன் பக்கவாத்தியம் வாசித்து சிறப்புப் பெற்றவர். அது மட்டுமல்ல கொழும்பிலும்சரி, யாழ்ப்பாணத்திலும்சரி, இசை அரங் கேற்றங்கள், நடனஅரங்கேற்றங்கள், மிருதங்க அரங்கேற்றங்கள், யாவற்றிற்கும் ப்ககவாத்தியம் வாசித்தவர் பின் கனடா நாட்டுக்குச் சென்றும் தன்னுடைய திறமையை இசைக்கச்சேரிகள், நடனநிகழ்ச்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் பக்கவாத்தியம் வாசித்து எங்கள் நாட்டுக்குப் பெருமை சேர்த்த ஒரு வித்துவான். இது மட்டுமல்ல யாழ்ப்பாணம், கொழும்பு, கனடா, ஆகிய இடங்களில் தனி வயலின் இசைக்கச்சேரியும் செய்து புகழ் தேடியவர். அத்துடன் சங்கீத இசைக்குத் தேவையான பாடங்களை ஸ்வர சாஹியத்துடன் ஒழுங்காக மாணவர்களுக்குக் கற்பித்து நல்ல மாணவர்களை உருவாக்கி உலகப் புகழ் பெற்ற வித்துவான் என்றால் கேசவமூர்த்தியையே சாரும்.

கலைகளும், கலைகளை ஆக்கிய கலைஞர்களும் என்றைக்குமே மக்களால் மறக்க மாட்டாதவர்கள், அந்த வகையில் புன்சிரிப்புடனும் எவரது மனத்தையும், புன்படாதவாறும், அன்புடனும், பழகும் தன்மையிலும், சிறந்து விளங்கியவர். அத்துடன் எந்த இசைக்கலைஞர்களும் தங்களுக்குப் பக்க வாத்தியம் வாசிக்க அணுகினாலும், மறுக்காது செய்துவிடுவார். எங்கள் குடும்பத்துடனும், எனது சகோதரர்களுடனும் அன்புடனும், பழகியும், இன்றும் எங்கள் ஈழத்து மக்களையும், விட்டுப்பிரிவது அனைத்து இசை உலகிற்கு பெரும் இழப்பாகும். அவர் இந்த மண்ணில் அனைவருடனும் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார். இவருடைய கலைப்பணி இவருடன் நின்றுவிடாது அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அவர் விட்டுச்சென்ற கலைப் பணியை நாமும் தொடர்வோம்.

வாழ்க அவர் நாமம்! வளர்க அவர் புகழ்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம்நிறைந்த கலைஞன்
# அமரர் R.S கேசவமூர்த்தி

G. நக்கீரன் B.A(D.PH)
[புல்லாங்குழல் / வாய்ப்பாட்டு கலைஞன்]
ஆசிரியர் – சுகம் – இதழ்

தொண்ணூறுகளின் ஆரம்பங்களில் வயிலன் வித்துவான் அமர்ர கேசவமூர்த்தி அவர்கள் எனக்கு பக்கவாத்தியம் வாசிக்கும் கலைஞானகி அறிமுகமானார். அன்று தொடக்கம், என்னுடைய கசச்சேரிகளுக்கு அவரே பக்கவாத்திய கலைஞன் ஆகினார். ஈழயுத்தத்தின் யாழ்குடாநாட்டின் இடம்பெயர்வுக்கு முன்னான காலத்தில் நாங்கள் ஒரு குழுவாகி கச்சேரிகள் செய்து வந்தோம். அங்கும் பல்வேறு இசைகச்சேரிகளை ஒன்றாக நடாத்தி வந்தோம். எமது இசைக்குழு ஒரு நண்பர்கள் குழவாக இடம்பெயர்ந்து அகதி வாழ்வு வாழும் துன்பமே தெரியாத அளவுக்கு தினசரி கூடி உண்டு மகிழ்ந்திருந்த காலம், அப்போது எங்கள் இசைப்பயணத்தில் இணைந்திருந்த கலைககுழுவின் வழிகாட்டி, மூத்த உறுப்பினர் அமரர் கேசவமூர்த்தி அவர்கள்.

அவருடன் எனக்கிருந்த இருபத்தைந்து ஆண்டு கால கலை உறவில் அவரை நான் அடையாளப்படுத்தக்கூடியதாக இருந்தது. நான் கொஞ்சம் நன்றாக கச்சேரி செய்து மக்களிடம் பெயர்கிடைத்து விடக்கூாது என்பதற்காகவே தள்ளி நின்ற எத்தனையோ கலைஞர்களுக்குள் ஒவ்வொரு வளரும் கலைஞனும் நன்றாக வரவேண்டும் எனும் நன்னோக்கோடு எனது மேடைகளை அலங்கரித்தவர் வயலின் வித்துவான் R.S கேசவமூர்த்தி அவர்கள். "கேசவண்ணா" என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட இக்கலைஞன் ஞானம் நிறைந்துள்போதும், ஞானச்செருக்கு, எள்ளளவும் அற்ற கலைஞனாகி நான் என்ற ஆணவம் அற்ற ஒருவனாகி எல்லோரையும் அன்பாகவும் பண்பாகவும் நேசித்த கலைஞராக எம்மத்தியில் மிளிர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய வயலின் இசையின் நுண்திறன்களாக இராக பாவம், கமகப்பிரயோகங்கள், பிருகா பிரயோகங்கள் எப்போதும் வெளிப்படும் வயலின் மட்டுமன்றி தவில் வாசிப்பதிலும் திறமையுள்ள கலைஞன் இவருடைய தவில் ஞானத்தின் பயனாக எனது அண்மைக்கால கச்சேரிகளில் கற்பனாசுரம் வாசிக்கும்போது மிக சுத்தமான கணக்கு வழக்குகளை கையாண்டு குறைப்புகளை செய்து மேடைகளில் என்னை திக்குமுக்காடச் செய்ய வைத்துள்ளமை என்னால் உணர முடிந்தது. எனது குருநாதர் திலகநாயகம் போல் அவர்களுடைய கச்சேரிகளில் பக்கவாத்தியமாக வயலின் வாசிக்கும்போது, அவருக்கு நிகராக சுருதிபேதம், கிரகபேதம், போன்றவற்றை வாசித்து படைத்துள்ளமையை நான் அனுபவத்தில் உணர்ந்தவன்.

"சும்மா இருக்கும் வேளைகளில் புல்லாங்குழலைக் கொண்டு வாரும். ஏதாவது பயிற்சி செய்யலாம்" என்று என்னை அழைப்பார். இது அவருடைய தளரா முயற்சியையும் வளரும் கலைஞர்களுக்கு ஊக்கம் கொடுக்கம் மனப்பான்மையும் வெளிப்படுத்துகிறது. நான் கொழும்பில் வாழ்ந்த காலங்களில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனத்துக்கு என்னை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி எனது கலைவளர்ச்சிக்கு உரமூட்டியவர். அரங்கேற்றங்களுக்கு ஒலிப்பதிவுகள், மேடைநிகழ்ச்சிகள் எனப்பலதரப்பட்ட இசைநிகழ்வுகளை எனக்கு ஏற்படுத்தித்தந்த உயர்பண்பு மிக்க, அன்பு மிக்க கலைஞன்.

இலங்கையில் மட்டுமன்றி கனடாவிலும், ஏராளமாக வயலின் கலைஞர்களை உருவாக்கி, மாதாந்த இசைநிகழ்ச்சிகளை நடாத்தி நற்கீர்த்தியுடன் தாயகம் திரும்பிய கலைஞன்.

நாம் இருவரும் சேர்ந்து இன்னும் பல இசைநிகழ்வுகளை நடாத்த பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருந்தோம். நாம் அண்மையில் நாவலப்பிட்டி முத்துமாரி அம்மன் கோவிலுக்கு கச்சேரி செய்வதற்காக சென்றபோது இருவரும் சேர்ந்த ஏராளமான புகைப்படங்கள் ஆறு, அருவி, மலை என எடுத்துக்கொண்டதை இப்போது எண்ணிப்பார்க்கிறேன், இறைவனின் வேலைதான் எல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது உடன்பிறவாத சகோதரனாக, நண்பனாக, குருவாக, சககலைஞராக, எனப் பகுதரப்பட்ட நிலைகளிலும் என்னுடன் இருந்த கேசவண்ணையின் நினைவு மலருக்கு ஆக்கம் எழுத வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை எண்ணி வேதனையடைகிறேன்.

மனிதன் என்ற பெயரோடு மனிதம் அற்ற, மனிதத்தன்மை யற்ற பலர் உலாவரும், இப்பூமியில் கலைஞனாக மட்டுமன்றி, மாண்புகள் நிறைந்த மனிதருள் மாணிக்கமாக **மனிதம் நிறைந்த கலைஞனாகி** விளங்கியவர் அமரர் R.S கேசவமூர்த்தி என்றால் மிகையாகது. அவரின் ஆன்மா, ஆண்டவனுடன் இரண்டறக்கலக்க ஆண்டவனிடம் மண்டியிட்டு வணங்குகின்றேன்.

## பொது அறிவு

1.அஞ்சல் அட்டையை அறிமுகம் செய்த நாடு?

அவுஸ்ரேலியா

2. செஞ்சிலுவை சின்னத்தை தேசியக்கொடியில் கொண்டுள்ள நாடு?

சுவிற்சலாந்து

3. சீனப்பெரும் சுவரின் நீளம்?

1684மைல்

4. உலகில் மிகப்பெரிய பாலைவனம்?

சகாரா

5.மிகப்பெரிய ஜனநாயக நாடு?

இந்தியா

6. ஜப்பானின் தேசி விளையாட்டு?

கராத்தே, ஜடோ

7. நதியே இல்லாத நாடு?

சவுதி அரேபியா

8. உப்புக்கு வரி போட்ட முதல் நாடு?

சீனா

9. சொக்கலட்டை அதிகமாக தயாரிக்கும் நாடு?

சுவிஸ்சுலாந்து

10. உலகில் பவளத் தீவுகள் நிறைந்த நாடு?

பஹறின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதய அஞ்சலி

**சங்கீதபூஷணம் திரு. செ. குமராசாமி**
**(கரவைக்குமரன்)**
**(முன்னாள் விரிவுரையாளர் – பிரதி அதிபர்)**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை**
**வீரபத்திரர் கோவிலடி**
**உடுப்பிட்டி**

என் உயிரோடும் உணர்வோடும் கலந்திருந்து நல்லுறவைப் பேணிவாழ்ந்த உத்தம நண்பன் அமரர் திரு.கேசவமூர்த்தி. எண்ணற்ற இசைமேடைகள், பாடல் ஒலிப்பதிவு இசைச் செயற்பாடுகள் பலவற்றில் என் இசைக்கு பக்கபலமாய் அணிசெய் இசைக்கலைஞனாய் கலை ஓங்க இசைமழை பொழிந்து இரசிகர்களை இசைவெள்ளத்தில் ஆழ்த்திய பெருமைக்குரியவர். நீண்டபல காலம் நாங்கள் பல கூடி நல்லவனாகவும் வல்லவனாகவும் என்னோடு நீண்டதோர் இசைப் பயணம் செய்த அற்புதக் கலைஞானாவார்.

பொறுமையின் வடிவம், அன்பின் சிகரம், கற்றோரும் மற்றோரும் போற்றிய நற்பண்பாளன். சிறந்த கடமைவீரன். பாராட்டுக்குரிய சாதனையாளன் முதலான நடிபங்கினையுடைய மனிதவடிவம். இவ்வித அன்புத்திருவுருவமான பெருமகனை கொடிய காலன் சடுதியில் கொண்டு சென்றானே. இவர் இழப்பு கலையுலகிற்கு ஈடு செய்யமுடியாத தொன்றாகும். என்செய்வது நீர்க்குமிழியாக்கை நிலையாதது. இருந்தும் அவர் பிரிவு எம்மையெல்லாம் வாட்டிவதைக்கின்றது. இத்துயரில் மூழ்கி நிற்கும் அவரது உற்ற இசை நண்பன் கரவைக்குமரன் ஆகிய என் உள்ளத்திலெழும் இதயாஞ்சலி...

01. கலைத்தாயின் மைந்தனே உன் கானம் பொழி திறத்தாலே
அலைபோன்ற மனங்களுக்கு அமைதியும் கொடுத்தவன் நீ!
நிலையில்லா வாழ்க்கையிலே நிலைத்து நீ வாழாமல்,
கலைவாழ்வைவிட்டு நீங்கி கந்தன் கழல் சேர்ந்தாயோ
02. திக்கெல்லாம் புகழ்பரப்பி தீரனாய் உலாவந்தாய்
தக்கோரும் புகழ்ந்தேத்தும் தகவுடைக்கலைஞன் நீ!
எக்காலம் உனைக்காண்பேன் எழில்மகனே! மன்னவனே!
துக்கமதில் மூழ்கியுள்ளேன் உனை இழந்த சோகத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. இராக தாளம் இணைந்துபெற்ற இசைப்புலவன் நீயல்லவா
மோகனமாய் இசைபொழிந்த கானமேகமே - உன்
மோகமுறும் நளின நடைபிடில் இனிமை கேட்பதெப்போ
சோககீதம் இசைக்கச் செய்து சொர்க்கலோகம் சென்றடைந்தாய்

04. கள்ளமில்லா மனம்கொண்ட கருணைவடிவம் நீயே! - இசைக்
கடமை தனை எந்நாளும் கருத்துடனே ஆற்றியவா - என்
உள்ளமெல்லாம் நிறைந்திருக்கும் உத்தமனே உனைப்பிரிந்து
வெள்ளமாய்ப் பெருகுதே கண்ணீர் உன் வதனம் இனிக் காண்போமோ

---

## *ஆதி அருள்நெறி மன்றத்தின்*
## *இரங்கற் செய்தி*



வயலின் வித்துவான் செந்திவேல் கேசவமூர்த்தி அவர்கள் 24..04.2011 அன்று சிவபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும், மனைவி, பிள்ளைகள், உற்றார் உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய சிதம்பர ஆதி நடராசப் பெருமானை பிரார்த்திக்கினறோம்

டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்
அறங்காவலர் சிதம்பர ஆதி நடேசர் ஆலயம்
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்மையில் அமரருலகம் எய்திய அளவையூர் *செந்தில்வேல் கேசவமூர்த்தி* அவர்கள் பற்றிய ஒரு மதிப்புரை

**நடராஜா குடும்பம்**
**திலகம், ரீச்சர்**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" -திருவள்ளுவர்-

"இசைஞானபூபதி" கேசவமூர்த்தி அவர்கள் வயலினிசையில் மாமேதை, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் தனது மனைவி மக்களுடன் தாமுண்டு, நமதுவேலையுண்டு எனக் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தவர்.

இதனைக் கேள்வியுற்ற நாங்களும் எமது சகஆசிரியரின் மகளுக்கும், எமது பெண்பிள்ளைகள் இருவருக்குமாக எமது வீட்டி லேயே வயலின்பயிற்சியை நடாத்தும்படி கேட்டோம். அதற்கிணங்க ஆசிரியரும் நமது வீட்டிலேயே பயிற்சியை நடாத்தினார்.

பயிற்சியை சாஸ்திரிய முறைப்படி கற்பித்து மாணவிகளின் திறமையை திறமையாக வெளிகொணர்ந்தார். மூன்றுமாணவிகளும் வ.மா.ச.ச பரீட்சையில் 4ம் வகுப்பு வரை கற்றுத்தேறினார்.

தமிழரின் போதாத காலம் எல்லாக் கல்வி நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் ஆயின. எல்லோரும் இடம்பெயர்ந்தோம். கலவரம் உச்ச நிலையை அடைந்தது. கொழும்பில் சிலகாலம் வாழ்ந்த கேசவமூர்த்தி அவர்கள் கனடாவுக்குச் சென்றார். அங்கேயும் கலாலயம் அமைத்தார். பெரும்புகழ் பெற்றார்.

கொழும்புக்குத் திரும்பிய கேசவன் அவர்கள் நடன அரங் கேற்றம், சங்கீதக்கச்சேரி, வீணை இசை போன்றவற்றிற்கு வயலினி சைத்தார். இப்படி இருக்கும்போது சிறிது காலத்தின் பின் நோய்வாய் பட்டுவெள்ளவத்தை "றோயல்" வைத்தியசாலையில் சிகிச்சை அளிக் கப்பட்டது. சிகிச்சை பலனளிக்காது இவ்வுலகை விட்டுப்பிரிந்தார்.

அன்னாரின் பிரிவு சங்கீத உலகுக்கு ஒரு பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவாற்றாமையினால் கலங்கும் மனைவி, மக்கள், சகோ தரர், உற்றார், உறவினர், நண்பர்கள்லினதும் அமைதி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாதஸ்வர வித்துவான் M.P பாலகிருஷ்ணன் அவர்களின் இரங்கற் செய்தி

அமரர் தம்பி கேசவமூர்த்தியின் இழப்பு கலைஞர்கள் யாவருக்கும் பெரிய இழப்பு அவருடைய பண்பும் நடத்தையும் யாவரையும் கவரக்கூடியவை. அப்படி ஒரு கலைஞனின் இழப்பு மிகவும் வருந்தத் தக்கது. எனது குடும்பத்தார் அனைவரும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எம்பெருமானை வேண்டிக்கொண்டு அன்னாரின் குடும்பத்தாருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அளவெட்டி M.P பாலகிருஷ்ணன் குடும்பம்
(கனடா)

## பாடினி இசையக அதிபரின் இரங்கற் செய்தி

அமரர் கேசவமூர்த்தி மாஸ்ரரின் இழப்பு எமக்கு மாபெரும் இழப்பு. தாங்கொணாத்துயரத்தை எமக்குத் தந்துவிட்டு இறைபதம் அடைந்த இந்தக் கலைஞரின் கலைச்சேவையும் பொதுச்சேவையும் சொல்லிலடங்காதவை. பாடினி இசையக வளர்ச்சிக்கு அவர் செய்த சேவைக்கு பாடினி இசையக மாணவர்கள் சார்பிலும் எனது உறவினர் என்ற முறையில் அவரது அன்பிற்கும் பண்பிற்கும் நிச்சயமாக அவருடைய குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாடினி இசையக அதிபர்
சித்திராங்கி S. (கனடா)

## சக்தி சங்கீத அக்கடமியின் இரங்கற் செய்தி

முன்னாள் இலங்கை வானொலி இசைக்கலைஞரும் கனடிய மண்ணில் அளப்பரும் இசைப்பணியாற்றியவரும் ஞானோதயம் கலைக்கூடத்தின் அதிபருமான இசைஞானபூபதி அளவையூர் செந்திவேல் கேசவமூர்த்தி அவர்கள் இறைபதம் எய்தியமை அறிந்து அதிர்ச்சியும் ஆற்றொணத் துயரமும் அடைந்தோம்.

இன்முகம் கொண்டு அகமகிழ்ந்து அன்போடும் பண்போடும் பழகி வந்த அன்னாரின் பிரிவுத்துயரில் வாடும் அன்னாரின் துணைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர், மாணவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பராசக்தி விநாயகதேவராசா
சக்தி சங்கீத அக்கடமி (கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# நன்றி நவில்கின்றோம்

பண்பும் பாசமும் மிக்க எமது குடும்பத்தலைவரின் பிரிவுச் செய்தி அறிந்து செய்வதறியாது திகைத்து நின்றவேளை உடன் வந்து எமது துயரத்தில் பங்குகொண்டு ஆறதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் எமது தந்தையின் மாணவர்கள், ரசிகர்களுக்கும், எமது தந்தையின் மரணச்செய்தியை கேள்வி யுற்று அதனை தொலைக்காட்சி, பத்திரிகைகள், இணையத் தளங்கள் மூலம் பிறருக்கு அறியச்செய்த எமது அன்பு நெஞ்சங்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல், கடிதம், தந்தி, பத்திரிகை, கண்ணீர்அஞ்சலி பிரசுரம், மலர்வலயம் ஆகியவற் றின்மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும்

கனடா, மற்றும் ஏனைய வெளிநாடுகளிலிருந்து அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும், இறுதிக்கரியைகளை சிறப் புடன் நடாத்திய குருக்கள் ஐயாவுக்கும், இறுதிநிகழ்வின்போது அஞ்சலி உரை நிகழ்த்திய அனைத்துள்ளங்களுக்கும், இறுதி அஞ்சலியிலும் ஊர்வலத்திலும் கலந்துகொண்ட அனைவருக் கும் இம்மலரினை அழகுற அச்சிட்டுத்தந்த பிள்ளையார் அச் சகத்தினருக்கும் மேலும் 09.05.2011 அன்று கீரிமலையில் நடை பெற்ற அந்தியேட்டிக் கிரியைகளிலும் 10.05.2011 அன்று நடை பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனை யிலும் உளமார வேண்டுதல் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GNANOTHAYAM KALAIKUDAM

ஞானோதயம் கலைக்கூடம்

கனடா

CANADA

பிள்ளையார் அச்சகம், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org